Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

தமிழ் Mirror

FRIDAY, JANUARY 03, 2025


வெள்ளிக்கிழமை 03 ஜனவரி 2025 | ஒளி: 10 கதிர்: 129 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

# சிறுநீரக நோயாளர்களின் கொடுப்பனவு அதிகரிப்பு

சிறுநீரக நோயாளர் கொடுப்பனவு ரூபா 7,500 இல் இருந்து 10,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக கிராம அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு தெரிவித்துள்ளது.

பிரதேச செயலக மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 47,244 சிறுநீரக நோயாளர்கள் ஏற்கனவே இதே கொடுப்பனவைப் பெற்று வருவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

சிறுநீரக நோயாளர் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள விளம்பரங்கள் முற்றிலும் பொய்யானது எனவும், சிறுநீரக கொடுப்பனவு, அஸ்வசும, உர மானியம், மீன்பிடி மானியம் என்பன செலுத்தும் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.



# பாடசாலை உபகரணங்களின் விலை 20% குறைப்பு

டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்து வருவதால் அப்பியாசக் கொப்பிகள் உள்ளிட்ட பாடசாலை உபகரணங்களின் விலை 20% குறைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிறு கைத்தொழில் சங்கம் தெரிவித்துள்ளது.

காகிதங்களுக்கு 18 சதவீத VAT மற்றும் 2.5 சதவீத சமூக பாதுகாப்பு வரி இருப்பதாகவும், இந்த இரண்டு வரிகளையும் நீக்கினால், பயிற்சி புத்தகங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்களின் விலையை மேலும் குறைக்க முடியும் என்றும் சங்கத்தின் தலைவர் நிருக்ஷ குமார தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# 'கை' சின்னத்தில் சு.க. குதிக்கும்



உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் உட்பட எதிர்வரும் தேர்தல்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 'கதிரை' சின்னத்தில் போட்டியிடும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

2025ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டாக இருக்கும் எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கைகோர்க்குமாறு இடதுசாரி குழுக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும் அவர் புத்தாண்டுக்கான பணிகளை ஆரம்பித்த பின்னர் ஊடகங்களிடம் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பல்வேறு முரண்பாடுகளைச் சுமுகமாக தீர்த்து கட்சியைப் பலப்படுத்தும் வகையில் புதிய பயணத்தைப் புத்தாண்டில் ஆரம்பிக்கவுள்ளதாக கட்சியின் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வலுப்படுத்த விசேட வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளதாகவும், பல்வேறு காரணங்களால் அரசியலில் இருந்து விலகிய அல்லது வேறு கட்சிகளில் இணைந்துள்ள அனைத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரையும் இந்த முயற்சியில் கட்சியுடன் கைகோர்க்குமாறு அழைப்பு விடுப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

## உள்ளூராட்சி தேர்தல் திருத்தம் வருகிறது

உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் இன்னும் இரண்டு வாரங்களில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

குறித்த சட்டமூலம் வர்த்தமானிக்காக அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## கிளை விழுந்ததில் கைதி மரணம்

மாத்தறை சிறைச்சாலை கட்டிடத்தின் மீது புதன்கிழமை (01) இரவு அரச மரத்தின் கிளையொன்று,விழுந்ததில் 34 வயதான கைதியொருவர் உயிரிழந்துள்ளார். 12 கைதிகள் தங்க வைக்கப்பட்டிருந்த கட்டிடத்தின் மீதே மரக்கிளை விழுந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## உடனடியாக பதிலளிக்க வட்ஸ்அப் எண் அறிமுகம்

மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் தொழில் அமைச்சால் 0707 22 78 77 என்ற புதிய வட்ஸ்அப் எண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தொழில் அமைச்சு மற்றும் தொழில் திணைக்களம் மூலம் மக்கள் எதிர்பார்க்கும் நிவாரணங்களும், தலையீடுகளும் இதன்மூலம் விரைவாக மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

தமிழ் அரசியல்

## கைதிகளை விடுவிக்குமாறு கையெழுத்து போராட்டம்



சண்முகம் தவசீலன்

நீண்டகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி மல்லாவி நகரில் கையெழுத்து போராட்டம் வியாழக்கிழமை (02) இடம்பெற்றது. போராளிகளின் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் மல்லாவி நகரில் குறித்த கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

## "உயர் கல்வி பிள்ளைகள் விலகுவதை ஆராயவும்"

உயர் கல்வியைப் பெறும் பிள்ளைகள் பாடசாலையிலிருந்து விலகுவது தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டுமெனவும், எந்தவொரு காரணங்களுக்காகவும் பிள்ளைகளுக்கான கல்வி சந்தர்ப்பங்கள் தவிர்க்கப்படுவது நிறுத்தப்பட வேண்டுமெனவும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## தேசிய புலனாய்வுப் பிரிவின் புதிய தலைவர் நியமனம்

மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய (ஓய்வு) இலங்கையின் தேசிய புலனாய்வுப் பிரிவின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் ருவன் வணிகசூரிய (ஓய்வு) தனது நியமனக் கடிதத்தைப் பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகோந்தவிடமிருந்து (ஓய்வு) புதன்கிழமை(01) பெற்றுக்கொண்டுள்ளார்.

இதனையடுத்து, மேஜர் ஜெனரல் வணிகசூரிய (ஓய்வு) ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேயில் உள்ள பாதுகாப்பு அமைச்சில் உள்ள தனது அலுவலகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்..




## சண்டித்தனம் செய்த மூவர் கைது

நிதர்ஷன் வினோத்

யாழ். நகர்ப் பகுதியில் இரவுவேளை முச்சக்கரவண்டியில் சாகசம் காட்டி சண்டித்தனம் செய்தனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மூன்று பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதுடன் இரண்டு முச்சக்கரவண்டிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.


அரியலை மற்றும் பொம்மை வெளிப் பகுதியைச் சேர்ந்த மூவர் யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வு பிரிவினரால், வியாழக்கிழமை (02) கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## இரண்டு சடலங்கள் மீட்பு

யது பாஸ்கரன்

கிளிநொச்சி-பரந்தன், முல்லைத்தீவு ஏ- 35 வீதியில் அமைந்துள்ள புளியம்பொக்கணை 10ஆம் கட்டை பாலத்திற்கு அடியில் இருந்து இரு ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



தொடர்ச்சி P2

## நேபாள பிரதமரை சந்தித்த ரணில்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் நேபாள பிரதமர் கே.பி ஷர்மா ஒலி இடையிலான சந்திப்பு நேபாளின் காத்மாண்டுவில் வியாழக்கிழமை(02) இடம்பெற்றது.



தொடர்ச்சி P2







## சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் மூன்று சிக்கின

நாட்டுக்குள் சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்டு, போலியான முறையில் ஆவணங்களைத் தயாரித்து, மோட்டார் திணைக்களத்தின் ஊடாக போலி இலக்கங்களுடன் பதிவு செய்யப்பட்டுப் பயன்படுத்திய வாகனங்கள் மூன்று கைப்பற்றப்பட்டுள்ளன.

பின்வத்த பொலிஸ் பிரிவில், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பயன்படுத்துவதாகக் கிடைத்த தகவலுக்கு அமைய வலான மோசடி தடுப்பு பிரிவுக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில், அந்த அதிகாரிகள் குழுவினர் 2024 டிசெம்பர் 31ஆம் திகதியன்று இராணுவம் பயன்படுத்தும் வாகனத்தைப் போன்ற Mitsubishi வாகனத்தை தமது பொறுப்பின் கீழ் கொண்டு வந்தனர்.

அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் பிரகாரம், Land Rover ஜீப் வாகனங்கள் இரண்டு, ரத்மலானை பிரதேசத்தில் வைத்து 2025.01.01 அன்று பொலிஸாரின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “உயர் கல்வி பிள்ளைகள் விலகுவதை ஆராயவும்”

மஹரகம தேசிய கல்வி நிறுவனத்திற்குக் கண்காணிப்பு விஜயத்தை செவ்வாய்க்கிழமை (31) மேற்கொண்ட போதே பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இதனை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய,

தற்காலத்தில் பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளில் பிள்ளைகள் தொடர்ச்சியாக இருப்பது மிகவும் குறைவாகவே உள்ளது. விசேடமாக ஆண் பிள்ளைகள் கல்வி செயற்பாடுகளிலிருந்து விலகிச் செல்வது அதிகரித்துள்ளது. எந்தவொரு சமூக, பொருளாதார காரணங்களை அடிப்படையாகக் கொண்டும் பிள்ளைகளுக்கான கல்வி சந்தர்ப்பங்கள் தவிர்க்கப்படுவதற்கு இடமளிக்கக்கூடாது. குழந்தைப் பருவ வளர்ச்சியிலிருந்து 13 வருடகால பாடசாலை கல்வி உட்பட உயர் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் அனைத்து பிள்ளைகளுக்கும் பகிரங்கமாகக் காணப்பட வேண்டும். தனிநபர் மற்றும் சமூக பரிணாமத்தை ஏற்படுத்துவதைக் கல்வியின் பிரதான இலக்காகக்கொள்வது மிக முக்கியமாகும்.

மக்கள் கோரிய சமூக பரிணாமத்தை முன்னெடுப்பதற்கென பரிணாமமடைந்த கல்வி மாற்றத்தை மேற்கொள்வதன் ஊடாக இந்த நாட்டின் பிள்ளைகளுக்கு புதிய உலகில் கால் பதிப்பதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு எமது அரசு செயற்படுகிறது. சமூகத்திற்கு பொறுப்புக்கூறும் பிரஜையை உருவாக்குவதற்கென கல்விக்காக ஒதுக்கப்படும் ஒவ்வொரு மூலதனத்தையும் நாட்டின் எதிர்கால முதலீடாகவே நாம் பார்க்கின்றோம். நீண்டகால பிரதிபலன்களைக் கொண்டுள்ள இந்த உணர்வுப்பூர்வமான வேலைத்திட்டங்கள் குறித்து தேசிய கல்வி நிறுவனத்திற்கு விசேட பொறுப்புக்கள் காணப்படுவதாகப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

## பாடசாலை உபகரணங்களின் விலை 20% குறைப்பு

புதிய கல்வியாண்டு ஆரம்பமாகியுள்ள நிலையில், பாடசாலை உபகரணங்கள், பயிற்சிப் புத்தகங்களை பெற்றோர்கள் குறைந்த விலையில் கொள்வனவு செய்யும் வாய்ப்புள்ளதாகவும், பாடசாலை ஆடைகளின் விலை கூட 20 ஆக குறைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

கடந்த அரசாங்கம் வற் வரி அதிகரிப்பு மற்றும் சில பொருட்களுக்கு புதிய வற் வரியை சேர்த்தமையினால் நடுத்தர மற்றும் சிறு கைத்தொழில்துறையினர் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும், தற்போதைய அரசாங்கம் இது தொடர்பில் கவனம் செலுத்தி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ரூபாயுடன் ஒப்பிடும் போது டொலரின் பெறுமதி குறைந்துள்ளதால், அதன் பலனை மக்களுக்கு வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும், தற்போதுள்ள அதிக வரிகளால் மக்களுக்கு பலன் கிடைக்காது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அப்பியாசக் கொப்பிகளின் விலைக் குறைப்பின் கீழ் கடந்த காலங்களில் 80 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட அப்பியாசக் கொப்பிகள் 60 ரூபாவாகவும், 120 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட அப்பியாசக் கொப்பிகள் 100 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சண்டித்தனம் செய்த மூவர் கைது

யாழ். நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை (31) இரவுவேளை ஒன்றுகூடிய இளைஞர்கள் குழுவினர், முச்சக்கரவண்டியில் சாகசம் காட்டியதுடன், இளைஞர் ஒருவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இது தொடர்பிலான காணொளி சமூக வலைத்தளங்களில் வரலான நிலையில், சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மீது உடன் நடவடிக்கை எடுக்கக்கோரி பல்வேறு தரப்பில் இருந்தும் அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் விரைந்து செயற்பட பொலிஸாரிடம் கோரியுள்ளார்.

இந்நிலையில், குறித்த காணொளியை அடிப்படையாகக் கொண்டு யாழ். பொலிஸ் புலனாய்வு பிரிவினர் முன்னெடுத்த விசாரணையின் போது, அடையாளம் காணப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சிலர் தலைமறைவாகியுள்ள நிலையில், குறித்த நபர்களைக் கைது செய்ய பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த தாக்குதலில் காயமடைந்த இளைஞன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## இரண்டு சடலங்கள் மீட்பு

இவ்வாறு மீட்கப்பட்ட இரண்டு சடலங்களையும் மீட்கப்பட்ட இடத்திற்குச் சென்ற கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் ஸ்மாத் ஜெமில் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்

அத்துடன், அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் இறந்தவர்களிடமிருந்து 71 ஆயிரத்து நூறு ரூபாய் பணமும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

திருகோணமலை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் புனரமைப்பு பணிகள் இடைநிறுத்தப்பட்ட பாலத்தின் உட்பகுதியில் விழுந்ததன் காரணமாக இருவரும் உயிரிழந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஜெய்கா வீட்டுத்திட்டம் இக்பால் நகர் நிலாவெளி பகுதியைச் சேர்ந்த அன்ரன் சாந்தன் (23 வயது) அதே பகுதியைச் சேர்ந்த சசிகரன் சிம்புரதன் (வயது 21) ஆகிய இருவரின் சடலங்களே மீட்கப்பட்டுள்ளன.

## கைதிகளை விடுவிக்குமாறு கையெழுத்து போராட்டம்

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும்

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட பின்னர் நீதி மன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி குறித்த கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

இதில் மத தலைவர்கள்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக பட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டு



கையெழுத்திட்டனர்.

நீண்டகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி சேகரிக்கப்படும் குறித்த கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டு மகஜர் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது

## சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் மூன்று சிக்கின

இந்த மூன்று வாகனங்களும் மோட்டார் பதிவு திணைக்களத்தின் ஊடாக, அரச நிறுவனங்களுக்குப் பதியப்படும் இலக்கங்களின் கீழ், போலியான ஆவணங்களைத் தயாரித்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி தேர்தல் திருத்தம் வருகிறது

2023ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காகக் கோரப்பட்ட வேட்புமனுக்களை மீளப்பெறுவதற்கு இந்த திருத்தங்கள் ஊடாக அனுமதி கோரப்பட்டுள்ளது.

புதிய வாக்காளர்களுக்கு வாக்களிப்பதற்கு வாய்ப்பளிக்கும் முக்கிய நோக்கத்துடன் இந்த திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கட்சித் தலைவர்களின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் இந்தத் திருத்தங்களை மேற்கொள்ள அமைச்சரவை அண்மையில் தீர்மானித்துள்ளது.

## கிளை விழுந்ததில் கைதி மரணம்

காயமடைந்த கைதிகள் மாத்தறை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட, சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே கைதி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். உயிரிழந்த சிறைக் கைதி மிதிகம பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

## நேபாள பிரதமரை சந்தித்த ரணில்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் இறுதி கிரியைக்குச் சென்றிருந்த நிலையில் நேபாள நாட்டிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். இதன்போதே குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உடனடியாக பதிலளிக்க வட்ஸ்அப் எண் அறிமுகம்

தனியார் மற்றும் அரை-அரசு ஊழியர்களின் சேவை பிரச்சனைகளுக்கு உடனடி பதிலளிப்பதே இந்த புதிய வட்ஸ்அப் எண்ணை அறிமுகப்படுத்தியதன் மற்றொரு நோக்கமாகும் என்று தொழில் அமைச்சு வெளியிட்டுள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தொழில் அமைச்சு மற்றும் தொழில் திணைக்களம் மூலம் மக்கள் எதிர்பார்க்கும் நிவாரணங்களும், தலையீடுகளும் இதன்மூலம் விரைவாக மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தனியார் மற்றும் அரை-அரசு ஊழியர்களின் சேவை பிரச்சனைகளுக்கு உடனடி பதிலளிப்பதே இந்த புதிய வட்ஸ்அப் எண்ணை அறிமுகப்படுத்தியதன் மற்றொரு நோக்கமாகும் என்று தொழில் அமைச்சு வெளியிட்டுள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் செயற்குழு சந்திப்பு

எம்.யூ.எம்.சனூன்

தேசிய மக்கள் சக்தி புத்தளம் செயற்குழுவினரின் தலைமையில் புத்தளம் நகர சபை வட்டாரம் 04 நெடுங்குளம் வான் சந்தி குளத்துக் கட்டு நடைபாதையை சுத்தப்படுத்தி குளத்தில் வளர்ந்திருந்த புற்களை அகற்றும் சிரமதானத்திற்கு வழங்கிய ஒத்துழைப்புக்காக புத்தளம் நகர சபை செயலாளர் திருமதி பிரீத்திக்காவை சந்தித்து புத்தளம் மக்கள் சார்பாக நன்றியை தெரிவித்தனர்.

இச்சந்திப்பின்போது, பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.



வான் சந்தி குளத்துக் கட்டு நடைபாதை பகுதியை அழகுபடுத்தல் மற்றும் ஒளியூட்டல். நகர் தழுவிய குப்பை அகற்றும் பணிகளை மேம்படுத்தல், கைவிடப்பட்ட நிலையில் இருக்கும் நகர சபைக்கு சொந்தமான வளங்களை புனரைப்பு செய்தல். பெண்களின் நலன்புரி முன்னேற்றம் தொடர்பான விடயங்களில் நகர சபை செயலாளரின் அக்கறையும் ஆர்வமும் இத்தருணத்தில் வெளிக்கொணரப்பட்டது.

இச்சந்திப்புக்கு தே.ம.ச. புத்தளம் நகர அமைப்பாளர் எம்.ஏ.எம். ரியாஸ், வட்டாரம் 04 நெடுங்குளம் அபிவிருத்தி செயற்குழு தலைவி சித்தி சலீமா, செயற்குழு உறுப்பினர் ஜே.எம்.ஏ. நபீல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## கிளிநொச்சியில் மடிச்சு கட்டி நோயின் தாக்கம் அதிகம்

யது பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள பெரும்போக நெற் செய்கையில் மடிச்சு கட்டி நோயின் தாக்கம் என்றுமில்லாதவாறு அதிகரித்து காணப்படுகிறதுமையால் நெல்லுற்பத்தி பாதிக்கப்படும் நிலை காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடு குளம் உள்ளிட்ட பாரிய மற்றும் நடுத்தர குளங்கள் மானாவாரி நிலங்கள் உள்ளடங்களாக சுமார் 69 ஆயிரம் தொடக்கம் 70 ஆயிரம் ஏக்கர் வரையான நிலப்பரப்பில் பெரும் போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

இந்த நிலையில் இம்முறை பெரும் போக நெற்செய்கையில் மடிச்சு கட்டி நோயின் தாக்கமும் தத்தியின் தாக்கமும் அதிகளவில் காணப்படுகின்றன.

இதனால் விவசாய உற்பத்தியில் பாதிப்பு ஏற்படும் என்று விவசாயிகள் சுட்டிக்காட்டி உள்ளனர்

குறிப்பாக பன்னங்கண்டி முரசுமோட்டை ஊரியான் உருத்திரபுரம் குஞ்சு பரந்தன் போன்ற பகுதிகளில் இவ்வாறான நோயின் தாக்கம் அதிகளவில் காணப்படுகிறது.

நோயை கட்டுப்படுத்தும் நோக்கில் விவசாய திணைக்களத்தின் ஆலோசனைகளுக்கு அமைவாக மருந்துகளை விசுறுகின்ற போதும் அவை கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை என்றும் இவ்வாறு தொடர்ச்சியான நோய் தாக்கத்தால் நெல் உற்பத்தியில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்

ஏற்கனவே மழை வெள்ளம் என்பவற்றால் அழிவுகளைச் சந்தித்த நாங்கள் இந்த நோய் தாக்கத்தால் மீளவும் அழிவை சந்திக்கும் நிலை காணப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

## பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஆர்ப்பாட்டத்திற்கு முஸ்தீபு

வி.ரி. சகாதேவராஜா

திருகோணமலை முத்துநகர் பிரிவிலுள்ள உப்புவெளி கமநல அபிவிருத்தி பிரிவில் உள்ள சுமார் 1600 ஏக்கர் வயற்காணி திடீரென சோலர் பவர் சூரிய மின்சக்தி உற்பத்தி நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டு இருப்பதையிட்டு பாதிக்கப்பட்ட விவசாயிகள் வெள்ளிக்கிழமை (03) ஆர்ப்பாட்டத்திற்கு தயாராகி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

> **இன்று வெள்ளிக்கிழமை திருகோணமலை பிரதேச செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடைபெறவிருக்கின்ற நிலையில் முன்பாக இவ் ஆர்ப்பாட்டம் நடைபெறவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது**

இங்கு சுமார் 1200 விவசாயிகள் காலா காலமாக குறித்த 1600ஏக்கர் விவசாய நிலங்களை செய்கை செய்து வருகிறார்கள். இதற்குள் 5 நீர்ப்பாசன குளங்களும் அடங்குகின்றன.

கடந்த வருடம் துறைமுக அதிகார சபையினர் சில பகுதிகளை தங்கள் பிரதேசம் என்று அடையாளம் படுத்தினர் . அதேவேளை தனியார் காணிகளும் இங்குள்ளன.

இந்த நிலையில் நேற்றைய தினம் திடீரென்று துறைமுக அதிகார சபை அந்த நிலங்களை சோலபவர் சூரிய சக்தி மின் உற்பத்தி நிறுவனத்திற்கு விடுவிக்கப்பட்டிருப்பதாகஅறிவித்தல் கிடைத்திருக்கின்றது.

இந்நிலையில் அங்கு பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்கள் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று போர்க்கொடி தூக்கி இருக்கிறார்கள்.

இன்று வெள்ளிக்கிழமை திருகோணமலை பிரதேச செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடைபெறவிருக்கின்ற நிலையில் முன்பாக இவ் ஆர்ப்பாட்டம் நடைபெறவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# காதலனுக்கு பரிசளித்த காதலி கைது

■ செ.தி.பெருமாள்

நுவரெலியா நீதவான் நீதிமன்றில் இருந்த அலைபேசியொன்றை களவாடி தனது காதலனுக்கு பரிசாக வழங்கிய பெண் ஒருவர் எதிர்வரும் 09ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நுவரெலியா நீதிமன்ற களஞ்சியசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த பெறுமதிமிக்க அலைபேசி ஒன்று காணாமல் போயுள்ளதாக நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த முறைப்பாட்டிற்கு அமைய அலைபேசி தரவுகளை சோதனையிட்ட பொலிஸாரால் காணாமல்போன தொலைபேசியை பயன்படுத்திக் கொண்டிருக்கும் நபரைக் கண்டுபிடித்து அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் போது நீதிமன்ற களஞ்சியசாலையில் பணிபுரிந்த அவருடைய காதலி அதனை பரிசாக வழங்கியமை தெரியவந்துள்ளது.

அதற்கமைய சந்தேக நபரான பெண் கைது செய்யப்பட்டு திங்கட்கிழமை (30) அன்று நீதவான் நீதிமன்றில் முன்னிறுத்திய போது அவரை 2025 ஜனவரி 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நுவரெலியா நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## வாகன விபத்தில் ஆசிரியை பலி





கேகாலை - அவிசாவளை வீதி அட்டால பிரதேசத்தில் புதன்கிழமை (01) மாலை வேனும் முச்சக்கர வண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் ஆசிரியை உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் காயமடைந்துள்ளதாக பிந்தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பே பிரதேசத்தில் உள்ள பாடசாலையொன்றில் கற்பிக்கும் அட்டால பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதான அனுஷா ஜயசேகர என்ற ஆசிரியர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அந்த ஆசிரியை அவரது இரண்டு குழந்தைகளுடன் முச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த நிலையில், எதிர் திசையிலிருந்து வந்த வேன், முச்சக்கர வண்டியுடன் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக கேகாலை பொது வைத்திய சாலையில் வைக்கப் பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்த மகள் மற்றும் மகன் கேகாலை பொது வைத்தியசாலையிலும் வேன் சாரதி கரவனெல்ல வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பின்தெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## திடீர் சுற்றிவளைப்பில் 130 பேர் கைது


■ செ.தி.பெருமாள்

ஹட்டன் பொலிஸ் பிரிவில் செவ்வாய்க்கிழமை (31) இரவு மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது, சுமார் 130 பேர் கைது செய்யப்பட்டு ஹட்டன் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது என ஹட்டன் வலய பொலிஸ் அதிகாரி பிரதீப் விஜயசேகர தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட 130 பேரில், போதையில் வாகனம் செலுத்திய நால்வர், வாகனங்கள் தவறான முறையில் செலுத்திய 109 பேர், பலதரப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்த 17 பேர் அடங்குவதாகவும் இவ்வாறு சுற்றிவளைப்புகள் தொடர்ந்து நடைபெறும் எனவும் அவர் கூறியுள்ளார்.

## குப்பையை வீசியருக்கு நேர்ந்த கதி





கம்பளை நகரிலுள்ள மீன் விற்பனை நிலையமொன்றின் மீன் கழிவுகளை, கம்பளை, அம்புலுவாவ பகுதியில் வீசிய நபர்கள், பிரதேச மக்களால் மடக்கி பிடிக்கப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், சுற்றாடலில் வீசப்பட்ட மீன் கழிவுகளை, குறித்த வாகனத்துக்குள்ளேயே மக்கள் போட்டுள்ளனர். மேலும் வீசிய மீன்களை வாகனத்தில் வந்தவர்களை வைத்து அல்ல வைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

## கஞ்சா செடிகளுடன் சின்னத்துறை கைது



அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளாஸ்கோ தோட்டத்தில் கஞ்சா செடிகளை வளர்த்து வந்த உதவி தோட்ட முகாமையாளரை புதன்கிழமை (01) பிற்பகல் சந்தேகத்தின் கைது செய்ததாக அக்கரப்பத்தனை பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் சாந்த பண்டார தெரிவித்தார்.

உதவித் தோட்ட முகாமையாளர் தனது உத்தியோகபூர்வ தோட்ட பங்களாவில் மரக்கறி தோட்டத்தில் கஞ்சா செடிகளை வளர்த்து வந்ததாகவும், தற்போது இரண்டு அடி உயரத்திற்குச் செடிகள் வளர்ந்துள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சுற்றிவளைப்பு நடத்தப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை, கைப்பற்றப்பட்ட 11 கஞ்சா செடிகளுடன், செடிகளையும், நுவரெலியா நீதவான் நீதிமன்றில் முன்னிறுத்த உள்ளதாகவும் அக்கரப்பத்தனை பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் சாந்த பண்டார மேலும் தெரிவித்தார்.

## 40 வருடங்களின் பின் பயணம் ஆரம்பம்

■ ரீ.எல்.ஜவ்பர்கான்



கடந்த 40 வருடங்களுக்கு மேலாக போக்குவரத்து வசதியின்றி அல்லல்பட்ட மக்களுக்கான புதிய பஸ் சேவையை 'கிறீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு ஏறாவூர் இலங்கை போக்குவரத்து சபை சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கஷ்டப் பிரதேசமான மாவலையாறு கிராமத்துக்கு செங்கலடி ஊடாக குறித்த பஸ் சேவை தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபுவின் வேண்டுகோளின் பேரில், ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் இலங்கை போக்குவரத்து சபை சாலையின் முகாமையாளர் எம். எம் ஷைனி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கை போக்குவரத்து சபை பிராந்திய முகாமையாளர் ஆர். எம் விஜித தர்மசேன உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டுள்ளனர்

செங்கலடியில் இருந்து காலையில் புறப்படும் பஸ் மாவலையாறு, மாவடிச்சேனை, சிவத்த பாலம் உட் பட பல கிராமங்கள் கூடாக சுமார் 28 கிலோமீட்டர் பயணத்தை மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## "78,375 வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளன"

■ யது பாஸ்கரன்

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் ஸார்ப் நிறுவனத்தினால் 78,375 அபாயகரமான வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளதாக ஸார்ப் நிறுவனம் தெரிவித்துள்ளது.

2009இல் யுத்தம் நிறைவு பெற்றதைத் தொடர்ந்து மக்களின் மீள்குடியேற்றம், விவசாய, உட்கட்டுமான நடவடிக்கைகள் என்பவற்றைத் துரிதப்படுத்தும் வகையில் பல்வேறு தொண்டு நிறுவனங்களால் சர்வதேச நாடுகளின் நிதியுதவியுடன் உள்ளூர் பணியாளர்களைக் கொண்டு வெடி பொருட்களை அகற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளில் ஸார்ப் நிறுவனம் ஈடுபட்டு வருகிறது

இவ்வாறு இலங்கையின் வடபகுதியில் மனிதாபிமான கண்ணி வெடி அகற்றலில் ஜப்பான் மற்றும் அமெரிக்க நாட்டு நிதியுதவியுடன் ஈடுபடும் ஸார்ப் (SHARP) மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது, கடந்த 2016 நவம்பர் மாதம் தொடக்கம் 2024 டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் குறித்த நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## குளவிக்கொட்டுக்கு அஞ்சி ஓடியதால் 11 பேருக்கு பாதிப்பு

குளவி தாக்குதலுக்கு உள்ளான பெண்ணொருவர் அலறியடித்துக் கொண்டு, கம்பளை அட்டபாகேயில் உள்ள உடகம கிராமிய வைத்தியசாலைக்குள் ஓடிய பிள்ளரும் அப்பெண்ணின் துரத்தி சென்று குளவிகள் கொட்டியுள்ளது. இதில் பாதிக்கப்பட்ட பெண் உட்பட 11 பேரை கம்பளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மருத்துவமனை ஊழியர்கள் நால்வர் மீதும், மருத்துவ மனைக்கு வந்திருந்த எட்டு பெண்கள் மீதும், மருத்துவர் மீதும் குளவிகள் கொண்டியுள்ளன.

அட்டபாகே கலவெல்கொல்ல பிரதேசத்தில் மரத்தில் கட்டப்பட்டிருந்த குளவி கூட்டை பறவையொன்று தாக்கியதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

அவ்விடத்திலிருந்து பயணித்த பெண் ஒருவரை இந்த குளவி கொட்டியதால் குளவி கொட்டியதிலிருந்து தப்பிக்க அலறியடித்துக் கொண்டு அப்பெண் வைத்தியசாலைக்கு ஓடியுள்ளார். அப்போது மருத்துவமனையில் சிகிச்சைகளைப் பெறுவதற்காக, அதிகமானோர் அங்குக் கூடியிருந்தனர். இந்த பெண் கூச்சலிட்டபடி அந்த கும்பலிடம் சென்றபோது, அவரை பின்தொடர்ந்து வந்த குளவிகள் அனைவரையும் தாக்கின.

இக்குழுவினர் வைத்தியசாலையின் ஜன்னல் கதவுகளை மூடி தீ குவியல்களை வீசி தப்பிச் செல்ல முற்பட்டனர். எனினும், முயற்சி கைகூடவில்லை. இந்நிலையில், இரண்டு அம்பியூலன்ஸ்கள் வைத்தியசாலைக்கு அவசரமாக அழைக்கப்பட்டு, குளவிகளால் கடுமையாகக் கொட்டப்பட்டவர்கள் கம்பளை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். வைத்தியசாலைக்கு அருகாமையில் உள்ள கடைகளின் ஊழியர்களுக்கும் குளவிகள் அச்சுறுத்தல் ஏற்பட்டதால் அவர்களும் கடைகளை மூடிவிட்டு தீயை கொளுத்திவிட்டு தப்பிச் செல்ல முற்பட்டதாக தெரியவருகின்றது.

## முன்னாள் அமைச்சர்களின் நினைவேந்தல்

முன்னாள் அமைச்சர்களான தியாகராஜா மகேஸ்வரன், பெரியசாமி சந்திரசேகரன் ஆகியோரின் நினைவேந்தல்கள், ஜனவரி 1ஆம் திகதியன்று இடம்பெற்றன.

கொழும்பில் வைத்து சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட, ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரனின் 17ஆவது ஆண்டு நினைவேந்தல் வட்டுக்கோட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நினைவேந்தல் நிகழ்வு ஐக்கிய தேசியக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி அமைப்பாளர் விஜிமருதன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, பூஜை வழிபாட்டு இடம்பெற்றதுடன், அதனையடுத்து ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு, அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில், வட்டுக்கோட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் விஜிமருதன், மதகுருமார்கள், கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவரும், முன்னாள் அமைச்சருமான அமரர் பெ.சந்திரசேகரனின் 15ஆவது சிரார்த்த தினம், ஹட்டனில் மலையக மக்கள் முன்னணியின் காரியாலயத்தில், ஜனவரி 1ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது.

மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையக தொழிலாளர் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னணியின் பிரதித் தலைவரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர்.ராஜாராம், முன்னணியின் செயலாளர் நாயகம் எஸ்.விஜயசந்திரன், மலையக தொழிலாளர் முன்னணியின் பொது செயலாளர் புஷ்பா விஷ்வநாதன், நிதி செயலாளர் தாளமுத்து சுதாகரன் உள்ளிட்ட ஆதரவாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, மேடையில் வைக்கப்பட்டிருந்த அமரர். பெ.சந்திரசேகரனின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து நினைவுச்சுடர் ஏற்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன், அமரர் பெ. சந்திரசேகரனின் 15ஆவது நினைவு தினமான ஜனவரி 01ஆம் திகதி, அண்ணா சந்திரசேகரன் தொழிலாளர் முன்னணியின் செயலாளர் நாயகம் அனுஷா சந்திரசேகரன் தலைமையில் நினைவு தின நிகழ்வு இடம்பெற்றது.

தலவாக்கலை ட்ரூப் தோட்ட விநாயகர் ஆலயத்துக்கான இராஜகோபுர புனருத்தான பணிகளுக்கான அடிக்கல் நாட்டப்பட்டதுடன், அமரர் சந்திரசேகரனின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

பு.கஜிந்தன், எஸ்.கணேசன், துவாரகஷான்

























# பொறுப்பும் பொறுப்புணர்வும் சகலருக்கும் அவசியம்

'தூய்மை இலங்கை' வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, இந்த கூட்டுப் பணியை நிறைவேற்றுவதில் அரச அதிகாரிகள் மாத்திரமல்ல, குடிமக்களுக்கும் பொறுப்பும் பொறுப்புக்கூறலும் உண்டு என குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை மக்கள் சமூகமானது மிக நீண்ட காலமாக அஸ்திவாரங்களும் அடித்தளங்களும் உடைக்கப்பட்ட ஒரு அரசாக இருப்பதால் முழு அரச துறையையும் கட்டியெழுப்பப் பலமான அடித்தளம் தேவை என ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

அழிந்து வரும் சமூக கட்டமைப்பையும் தாய் நாட்டையும் மீட்டெடுப்பதற்கு மூன்று முக்கிய நோக்கங்களை முன்வைத்து செயற்படவுள்ளதாகத் தெரிவித்துள்ள ஜனாதிபதி, குடிமக்களை வறுமையிலிருந்து விடுவித்தல், கிராமத்திற்குப் பொருளாதார நன்மைகளைக் கொண்டு வரும் அமைப்பை உருவாக்குதல், முழு நாட்டையும் டிஜிட்டல் மயமாக்குதல் மற்றும் குடிமகனுக்கும் அரசுக்கும் இடையே நேரடி உறவை உருவாக்குதல் ஆகியவை அவற்றில் மிக முக்கியமான பணிகளில் ஒன்றாகும்.

இலஞ்சமும் ஊழலும் புற்று நோயாக முழு அரசமைப்பு முழுவதிலும் பரவியுள்ளதாகவும், ஊழல் மோசடிகளைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசியல் அதிகாரத்தின் தலையீடும் முன்னுதாரணமும் மட்டும் போதாது .இந்த வேலைத்திட்டம் வேறொரு கட்சி அல்லது குழுவின் வேலைத்திட்டம் அல்ல, மாறாக முழு பிரஜை சமூகத்தினதும் வேலைத்திட்டமாகும். அதற்கான கூட்டுப் பொறுப்பு அனைவருக்கும் உள்ளதால், அந்த பொறுப்பையும் பொறுப்புக்கூறலையும் அரசு அதிகாரிகள் நிறைவேற்ற வேண்டும்.

பொது அரசியல் துறையில் பொதுப்பணி செய்து லாபம் அல்லது தரகு பணத்தை பொக்கெட்டில் போடும் முறைதான் இதுவரை இருந்தது. ஆனால், தூய்மையான இலங்கை திட்டத்தின் அனைத்து முன்னணி தலைவர்களும் வித்தியாசமான சமூக மாதிரியை வழங்கியுள்ளனர்.

நிச்சயமாக, இது இதுவரை இல்லாத மற்றும் கேள்விப்படாத ஒரு வகை நிரலாகும். ஒரு குறிப்பிட்ட சாலை வரைபடத்துடன் கூடிய திட்டம். தற்போதுள்ள சமூகக் கட்டமைப்பை மாற்றி சுத்தம் செய்ய வேண்டும் என்பதில் அனைவரும் உடன்படுகிறோம்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் அந்த நிறுவனங்கள் சுத்தப்படுத்தப்பட்டு மக்களின் உரிமைகளாக மாற்றப்படும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. எனவே, இப்போது தேவைப்படுவது முழு இயந்திரத்தையும் சுத்தப்படுத்தி, மக்கள் கோரும் உண்மையான தலைமை மாற்றத்தைக் கொண்டுவருவதுதான்.

தூய்மையான இலங்கைத் திட்டம் அடிமட்டம் வரை சமூக மயமாகி அனைத்துப் பிரஜைகளின் பங்களிப்பையும் பெற்று ஊழல், மோசடி, முறைகேடுகளின் பக்கங்களைப் பார்த்து, மக்கள் விரும்பிய சுதந்திர இலங்கையைக் கட்டியெழுப்ப உதவுமானால் அது மிகவும் உகந்த விடயமாகும். அதற்காக, பொறுப்பும் மற்றும் பொறுப்புணர்வும் சகலருக்கும் அவசியமாகும்.




தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk

எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

உலகம் இருளில் மூழ்கிக் கிடந்தாலும், அநேகருக்கு உறக்கம் வருவதில்லை. இதை விடத் துன்பம் வேறில்லை.

மனிதர்களுக்கு எத்தனை எத்தனை பிரச்சினைகள்? இன்ப துன்பங்களை ஒன்றாக எண்ணி, நிர்மல நிலையில் வாழும் பக்குவம் யாவருக்கும் வருவதில்லை. வந்தாலும் அது துறவுநிலை.

மறக்க வேண்டியதை மறக்க முடியாது இருக்கிறது. சந்தோச உணர்வை மிகையாகக் காட்டும் மக்கள், துன்பத்திலும் தம் நிலை இழந்து துன்ப சாகரத்தில் மூழ்கிவிடுகின்றார்கள். இது மானிட யதார்த்தம்.

இன்னும் சிலர் தங்களுக்குச் சந்தோசம் வந்தாலோ, வரவு மேலோங்கினாலோ எவரையும் கண்டுகொள்வதுமில்லை. தங்களுக்கு ஏதாவது சின்னத் துன்பம் வந்தாலும் கூட, அதுதான் உலக பிரளயத்திலும் அதிகமானது என எண்ணிக்கொள்கின்றார்கள்.

மனித மனம் உடன் பலமழந்துவிடுகின்றது. இன்ப, துன்பம் வந்தால், தன்னை மறப்பவர்கள், அது பலவீனம் என எண்ணுவதுமில்லை. இவை இயல்பு. மனவுறுதி முழுமையடைய முயலவேண்டும்.

நன்றி-பருத்தியூர் பாலா.வயிரவநாதன்

## கடிதங்கள்

### பற்றாக்குறையை நிவர்த்தி செய்க

வவுனியா தெற்கு வலயத்தில் கணித பாட ஆசிரியர்கள் 23 பேருக்கு பற்றாக்குறையாக இருப்பதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வவுனியா தெற்கு வலய செயலாளர் கிருஷ்ணகோபால் வசந்தரூபனால், அனுப்பி வைக்கப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வவுனியா தெற்கு வலய பாடசாலைகளில் தற்போது பல படங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகிறது. இதனை ஆசிரியர் இடமாற்றங்கள் மற்றும் நியமனங்களின் போது வடக்கு மாகாண கல்வி அமைச்சு கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக வவுனியா தெற்கு வலயத்தில் 23 கணித பாட ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதுடன் 2 விஞ்ஞான பாட ஆசிரியர்களும் பற்றாக்குறையாக இருக்கிறது. அத்துடன் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்திற்கு 7 ஆசிரியர்களும் பற்றாக்குறையாக உள்ளது.

முக்கியமான பாடத்துறைகளில் நிலவும் இவ்வாறான ஆசிரியர் பற்றாக்குறையானது மாணவர்களின் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே, தற்போது வட மாகாணத்தில் வழங்கப்படவுள்ள ஆசிரியர் இடமாற்றங்கள் போது, இதனைக் கருத்தில் கொள்ள வேண்டும் எனவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

- க.அகரன்

## பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை– 01

# பொருளாதார நெருக்கடி முடிவுறாத் துயரம்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

புத்தாண்டு பிறந்தாலும், அதனை சராசரி இலங்கையர்கள் கொண்டாடும் மனநிலையில் இல்லை. பொருளாதார நெருக்கடி, மக்கள் எழுச்சி, ஏமாற்றம், புதிய ஜனாதிபதி, அதீத பெரும்பான்மையுடனான பாராளுமன்றம் என மூன்று ஆண்டுகளில் ஏராளமானவற்றை இலங்கையர்கள் பார்த்து விட்டார்கள். இன்னமும் இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளவில்லை. போகிறபோக்கில் இப்போது அதிலிருந்து மீள்வதற்கான வாய்ப்புகள் குறைவு என்றே சொல்லத் தோன்றுகிறது.

இலங்கை ஏன் இவ்வாறான ஒரு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியது? 17ஆவது முறையும் ஐ.எம்.எவ்விடமிருந்து பெற்ற கடன் இலங்கையை மீட்குமா? இது வெறுமனே ஒரு பொருளாதார நெருக்கடி மட்டும் தானா? அனைத்தையும் மாற்றுவோம் என்று ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தியால் எதையும் அசைக்க முடியாமலிருப்பது ஏன்? தற்போதைய சமூக நெருக்கடியின் பலபரிமாணங்கள் எவை அவை குறித்துப் போதிய அக்கறை செலுத்தப்பட்டுள்ளதா? தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இயலாமைக்குரிய காரணங்கள் எவை? இலங்கையின் எதிர்காலம் என்ன? இக் கேள்விகளை விரிவாக இத்தொடர் ஆராய முனைகிறது.

கொவிட்-19 தொற்று நோய் பரவியதிலிருந்து, உலகப் பொருளாதாரம் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. விநியோகச் சங்கிலித் தடங்கல்கள், வளர்ச்சி விகிதங்கள் குறைதல், தொற்றுநோயின் புதிய அலைகள் மற்றும் அதிகரித்துவரும் வறுமை மற்றும் சமத்துவமின்மை போன்ற பல சவால்களை உலகின் பலநாடுகள் எதிர்கொண்டுள்ளன. தொற்று நோய் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டு நான்கு ஆண்டுகளுக்குப் பிறகும், பொருளாதாரங்கள் இன்னும் போராடிவருகின்றன. மேலும், நிலையான வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் அனுபவிப்பது கடினமாக உள்ளது. இந்த வரிசையில் துன்புறும் நாடுகளின் பட்டியலில் இலங்கை முன்னிலையில் இருக்கிறது.

கடந்த ஐந்து தசாப்தங்களாக வெளிநாட்டு இறையாண்மைக் கடனை உத்தியோகப்பூர்வமாகச் செலுத்தத் தவறிய ஆசியாவின் ஒரே நாடு என்ற களங்கத்துடன் இலங்கை ஏன் இறையாண்மைக் கடன் நெருக்கடிக்கு அடிபணிந்தது? மீட்சிக்கான பாதை ஏன் நீண்டதாகவும் ஆபத்தானதாகவும் மாறிவிட்டது? இவ்விரு கேள்விகளும் சாதாரண இலங்கையர்களின் மனதில் நீங்காமல் தொடர்வன. இதை விளங்கிக் கொள்வதற்கு கொவிட்-19 பெருந்தொற்றோ, ஈஸ்டர் தாக்குதல்களோ, மட்டும் போதுமானவையல்ல.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி ஆழமடைவதற்கும், 2009 மே மாதம் உள்நாட்டுப் போர் முடிவடைந்த தசாப்தத்தில் இலங்கைப் பொருளாதாரத்தின் கொள்கை ஆட்சி மாற்றம் மற்றும் செயல்திறன் ஆகியவற்றுக்கிடையிலான இடைத்தொடர் பற்றிய முறையான பகுப்பாய்வு தேவைப்படுகிறது. பொருளாதாரம் நெருக்கடியிலிருந்து வெளிவருவதற்கும், நாட்டை நிலைநிறுத்துவதற்கும் எந்தவகையான கொள்கைப் பிரதிபலிப்பு அவசியம் என்பதைத் தீர்மானிக்க, காரணங்களை முறையாகக் கண்டறிவது அவசியம். அதன் மூலமே நெருக்கடிக்கு அப்பாற்பட்ட நிலையான வளர்ச்சிப் பாதையை உருவாக்க முடியும்.

துரதிர்ஷ்டவசமாக அவ்வாறானதொரு பாதையைக் கண்டறியும் முயற்சியில் இலங்கையின் அரசாங்கமும் கொள்கை வகுப்பாளர்களும் ஈடுபடுவதாகத் தெரியவில்லை. எந்தப் பாதையும் கொள்கைகளும் பேரழிவைத் தந்தனவோ அவற்றை வேறுபெயர்களில் தற்போதைய அரசாங்கமும் பின்பற்றுவது துயரம். இதற்கான காரணம் இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டமைக்கான அடிப்படைக் காரணிகள் பற்றிய தெளிவான புரிதலின்மையே.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான மூன்று தசாப்தகால யுத்தம் மே 2009இல் முடிவுக்கு வந்ததன் பின்னர் நாடு இயல்பு நிலைக்குத் திரும்பியது. அதைத் தொடர்ந்து, அரசாங்கத்தின் அபிவிருத்தி மூலோபாயத்தின் கீழ், பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி முக்கிய முன்னுரிமையாக மாறியது. போரினால் ஏற்பட்ட,கால் நூற்றாண்டு அழிவு, புறக்கணிப்பு மற்றும் அத்தியாவசிய உள்கட்டமைப்பின் சிதைவுக்குப் பிறகு கணிசமான பொதுத்துறை ஈடுபாட்டுடன் கூடிய பெரிய அளவிலான புனரமைப்பு முயற்சி தெளிவாகத் தேவைப்பட்டது. எவ்வாறாயினும்,பொது முதலீட்டுத் திட்டம் நாடளாவிய உள்கட்டமைப்பு மறுசீரமைப்புக்கு உதவவில்லை. நவீன துறைமுகம், விமானநிலையம், நவீன கிரிக்கெட் மைதானம் மற்றும் பிறவசதிகள் போன்ற பல அரசாங்க உள்கட்டமைப்பு திட்டங்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் ஆதரவு தளத்தின் மையப்பகுதியான, இலங்கையின் தென் பிராந்தியங்களில் நடந்தன.

உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான முக்கியத்துவம், சீனாவின் 'ஒருவார் ஒரு வழி' நிகழ்ச்சித் திட்டத்தின் புவிசார் அரசியல் உயர்விலிருந்து கூடுதல் உத்வேகத்தைப் பெற்றது. ஆரம்பத்தில், பெரிய முதலீட்டுத் திட்டங்களுக்கு சீனா ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி மற்றும் சீனா மேம்பாட்டு வங்கியின் கடன்கள் மூலம் நிதியளிக்கப்பட்டன. முதலீட்டுத் திட்டத்தின் அடுத்தடுத்த விரிவாக்கம், பிற சீன மூலங்களிலிருந்து கடன் வாங்குதல் மற்றும் இறையாண்மை யூரோ பத்திரங்கள் மற்றும் டொலர் மதிப்பிலான தேசிய வளர்ச்சிப் பத்திரங்களை வழங்குவதை உள்ளடக்கியது. வெளிநாட்டு நிதியுதவி திட்டங்கள் கணிசமான உள்நாட்டு வளங்களை எதிர் நிதியுதவிக்காக இழுத்து, நிதிப் பற்றாக்குறைக்குப் பங்களித்தன, உள்நாட்டு வங்கிக் கடன் வாங்குதல் மற்றும் பெரும்பாலும் மத்திய வங்கியிலிருந்து கடன் வாங்குதல் அல்லது பணம் அச்சிடுதல் ஆகியவற்றின் வழியாக நிதியளிக்கப்பட்டது.

இவையனைத்தும் இணைந்து இலங்கையைப் பொருளாதார நெருக்கடியில் தள்ளின. இதிலிருந்து தப்பித்தல் என்ற பெயரில் சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எவ்) காலடிகளில் இலங்கை விழுந்தது. 16 தடவை கடன் வாங்கித் தீர்க்கவியலாத பிரச்சனையை 17ஆவது தடவை கடன் வாங்குவதன் மூலம் தீர்க்கலாம் என்று எமக்கு சொல்லப்பட்டது. அதன்படி, இப்போது நாட்டின் பொருளாதார வழிகாட்டியாக ஐ.எம்.எவ் உள்ளது.

இலங்கையின் நெருக்கடியின் மிகவும் ஏமாற்றமளிக்கும் அம்சங்களில் ஒன்று, ஐ.எம்.எவ் சுமத்தப்பட்ட நிதி அழுத்தத்திற்கு மேலதிகமாக, கொள்கைத் தலையீடுகளை உருவாக்கும் பெரிய பொருளாதாரக் கொள்கை முடிவுகளில் திருத்தம் செய்யப்படவில்லை. அதை செய்யாமல் கண்ணை மூடிக்கொண்டு சுடுகாடு நோக்கி நடக்கும் வேலையையே அரசாங்கமும் கொள்கை வகுப்பாளர்களும் செய்கிறார்கள். இலங்கையின் பொருளாதாரக் கொள்கை சார் திட்டமிடல் என்பது நிவாரணம் மற்றும் மீட்புக்காக மிகவும் வலுவான அர்த்தத்தில் வடிவமைக்கப்பட வேண்டும். ஆனால், தற்போதைய சூழ்நிலையில், பணவீக்கம் மற்றும் மாற்று விகிதம் போன்ற ஒரு சில மேற்பரப்பு குறி காட்டிகளில் முன்னேற்றத்தைக் காட்டுவதையே அரசாங்கம் உற்சாகப்படுத்துகிறது. இருந்தபோதிலும், இலங்கை தனது பொருளாதார மந்தநிலையைக் கடக்கவில்லை என்பதே யதார்த்தம்.

வாழ்க்கைச் செலவு நெருக்கடி என்பது வளர்ந்த அல்லது வளரும் எல்லா நாடுகளுக்கும் பரவும் ஒருபொருளாதார தொற்று நோயாகும். எனவே, கடந்த சில வாரங்களாகத் தேங்காயின் விலை உயர்வு, அரிசி மற்றும் உப்பு சந்தையில் தட்டுப்பாடு குறித்து அரசாங்கத்தின் மீது தொடர்ந்து சரமாரியாகத் தாக்குதல்கள் நடத்தப்படுவது இலங்கைக்கு மட்டும் சொந்தமானது அல்ல. இலங்கையில் சந்தையை ஒரு சிலர் கட்டுப்படுத்துவதால் இந்தப் பிரச்சனைமிகவும் தீவிரமானது. அரசாங்கம் இதைக் கையாளத் தடுமாறுகிறது. பழையைப் பொருளாதாரக் கட்டமைப்பு சார் கொள்கை முடிவுகளின் படி இந்தப் பிரச்சனையை கையாள இயலாது.

இங்கு கவனிக்க வேண்டியது என்னவெனில், உலகளவில் நிச்சயமாக, அரசாங்கங்களும் மத்திய வங்கிகளும் விலைவாசி உயர்வைப் பண வீக்கத்தின் அறிகுறியாகக் கருதுகின்றன. வட்டி விகிதங்களை உயர்த்துவதன் மூலம் இந்த பணவீக்கத்தைத் தடுக்க மத்திய வங்கிகள் போராடும் அதேவேளையில், வாக்காளர்களின் பின்னடைவை எதிர்கொள்ளும் ஜனநாயக அரசாங்கங்கள் நுகர்வோரின் பண வருவாயை அதிகரிக்க வரவு-செலவுத் திட்டத்தின் அடிப்படையிலான தீர்வுகளைப் பார்க்கின்றன. இவை தற்காலிக நோய்த்தடுப்பு மருந்துகள். இவை பொருளாதார நெருக்கடி என்ற இந்த தொற்று நோயை முதலில் கொண்டு வந்த வைரஸ்களைக் கொல்ல நிரந்தரமான சிகிச்சை அல்ல.

தற்போதைய வாழ்க்கைச் செலவு நெருக்கடி இலங்கைக்கு வெளியிலிருந்து தோன்றிய பிரச்சினைகளின் விளைபொருளாக இருந்தாலும், இந்த நெருக்கடியைக் குறைப்பதற்கு முன்னைய அரசாங்கங்களால் தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. விவசாயத் துறைக்கு வளங்களை அதிகரிப்பதன் மூலம் உணவுப் பாதுகாப்பை வழங்குவதற்கான ஜனாதிபதியின் தீர்மானம் வரவேற்கத்தக்கது. அரிசி, உப்பு மற்றும் தேங்காய் தட்டுப்பாட்டுக்காக அவர் மீதும் அரசாங்கத்தின் மீதும் எதிர்க்கட்சிகள் சரமாரியாகத் தாக்கினாலும், இந்தப் பிரச்சினைகளுக்கு நீண்ட வரலாறு உண்டு என்பதுதான் உண்மை. வாழ்க்கைச் செலவு அதிகரித்திருக்கிறது என்பது மறுக்க முடியாதது, ஆனால், இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு பண வருமானத்தை அதிகரிப்பதல்ல. வரவிருக்கும் வரவு- செலவுத் திட்டமும் நீண்டகால நோக்கிலான பொருளாதாரக் கொள்கை வகுப்புகளும், வாழ்க்கைச் செலவு நெருக்கடியைச் சமாளிப்பதற்கான செயல்திட்டத்தையும் ஆதாரங்களையும் முறையாகப் பின்பற்றவேண்டும். ஆனால், ஐ.எம்.எவ்வின் வழி காட்டலில் நடைபோடும் ஒரு அரசாங்கத்தால் அதைச் செய்யமுடியாது. இரண்டு எதிரெதிர்த் தோணிகளில் ஜனாதிபதியும் அரசாங்கமும் கால் வைத்துள்ளன.

Global CEO Forum 2024நிகழ்வில்

# Baurs தலைமைத்துவ அணிக்கு கௌரவம்



Baursஎன அறியப்படும் A.Baur & Co. (Pvt.) Ltd., 127 வருட காலமாக இலங்கையின் பொருளாதாரத்துக்கு சிறந்த பங்களிப்புகளை வழங்கி வருகின்றமைக்காக கீர்த்திநாமத்தைப் பெற்றுள்ளது. நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி ரொல்ஃப் பிளாசர் மற்றும் சிறந்த முகாமைத்துவ அணியினருக்கு, அண்மையில் கொழும்பு ITC Ratnadipaஹோட்டலில் நடைபெற்ற Global CEOதலைமைத்துவ சிறப்பு விருதுகளில் கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிளாசருடன், Baursஇன் சிரேஷ்ட முகாமைத்துவ அணியினரும் திரண்ட தலைமைத்துவத்துக்கான கௌரவிப்பைப் பெற்றுக் கொண்டனர். கடந்த நான்கு வருட காலப்பகுதியில் கொவிட்-19 தொற்றுப் பரவல், சமூக-பொருளாதார நெருக்கடி மற்றும் பரந்த பொருளாதார பிரச்சனைகள் போன்ற நாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த சூழலில் நிறுவனத்தை வழிநடத்தியதில் இவர்கள் முக்கிய பங்காற்றியிருந்தனர். Baurs இன் நிலைபேறான வளர்ச்சி மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றை முன்னெடுத்துச் செல்கின்றமையை கௌரவிக்கும் வகையில்இந்த விருது வழங்கப்பட்டிருந்தது.

Baurs இன் தலைமைத்துவத்தை வெளிப்படுத்தும் மீண்டெழும் திறன், இணைந்த செயற்பாடு மற்றும் தூர நோக்குடைய வழிமுறை போன்றவற்றை இந்த விருது உறுதி செய்திருந்தது. விருது வென்ற அணியினரில் விவசாய பிரதி முகாமைத்துவ பணிப்பாளர்/பணிப்பாளர் ஜனக குணசேகர, சுகாதார பராமரிப்பு பிரதி முகாமைத்துவ பணிப்பாளர்/பணிப்பாளர் நிஷாந்த வீரசிங்க, தகவல் தொழில்நுட்ப பணிப்பாளர் அனோஜா பஸ்நாயக்க, நிதியியல் பணிப்பாளர் பவித்ரா சமரசிங்க, மனித வளங்கள், நிர்வாகம், கொள்முதல் மற்றும் நிலைபேறாண்மை சிரேஷ்ட பொது முகாமையாளர் கென் விஜயகுமார், விவசாய சிரேஷ்ட பொது முகாமையாளர் நிலங்க சமரசிங்க, ஆய்வு மற்றும் தயாரிப்பு விருத்தி சிரேஷ்ட பொது முகாமையாளர் தக்ஷின ஹெட்டியாரச்சி, சுற்றுலா மற்றும் கல்வி சிரேஷ்ட பொது முகாமையாளர் டானியெலா முனசிங்க, உதவிச் சேவைகள் சுகாதார பராமரிப்பு பொது முகாமையாளர் அனுர வீரசிங்க மற்றும் தொழிற்துறை மூலப்பொருட்கள் சிரேஷ்ட முகாமையாளர் தேவபிரிய அர்த்தநாயக்க ஆகியோர் அடங்கியுள்ளனர்.

Baurs முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி ரொல்ஃப் பிளாசர் குறிப்பிடுகையில், "Baurs ஐச் சேர்ந்த அணியினரின் திரண்ட செயற்பாடு மற்றும் அர்ப்பணிப்பை கொண்டாடும் வகையில் இந்த விருது அமைந்துள்ளது. இலங்கையில் நாம் சிறந்தவர்களாக திகழ மாத்திரம் நாம் முயற்சி செய்யாது, இலங்கைக்கு சிறப்பானவர்களாக திகழ முயற்சி செய்கின்றோம்." என்றார்.

ரொல்ஃப் மற்றும் அணியினரின் தூர நோக்குடைய தலைமைத்துவத்தின் கீழ், Baurs பல முக்கியத்துவம் வாய்ந்த மைல்கற்களை எய்தியுள்ளது. கடந்த நான்கு வருடங்களில் அதன் சுகாதார பராமரிப்பு வியாபாரம் இரட்டிப்படைந்துள்ளதுடன், உலகின் சிறந்த 10 மருந்துப்பொருட்கள் முன்னோடிகளுடனான பங்காண்மைகளையும் கொண்டுள்ளது. இலங்கையின் நிலைபேறான சேதன விவசாயத்தில் முக்கியமான பங்காற்றியிருந்ததை தொடர்ந்து, பரந்தளவு பங்காளர்களுடன் இணைந்து சிறப்புக்கான நிலையத்தை Baurs நிறுவியுள்ளதுடன், சூழல் தாக்கத்தை தணிப்பதற்காக சுப்பர் யூரியாவையும் அறிமுகம் செய்திருந்தது. Siss Hotel Management Academy (SHMA) மற்றும் Skills for Sustainable Groth (SSG) செயற்திட்டங்கள் போன்றன இலங்கையில் உலகத் தரம் வாய்ந்த கல்வியை கொண்டு வருவதில் முக்கிய பங்காற்றுகின்றமை ஆகிய இதர முக்கிய செயற்பாடுகளாக அமைந்துள்ளன.

முன்னர், ஆண்டின் அதிகளவு பின்பற்றப்படும் பிரதம நிறைவேற்று அதிகாரி 2022 விருதை ரொல்ஃப் பிளாசர் வெற்றியீட்டியிருந்ததுடன், ஆண்டின் சிறந்த மனித வளங்கள் வியாபார தலைவர் விருதை கென் விஜயகுமார் பெற்றிருந்தார். இலங்கை கணினி சங்கத்தின் அறிமுக தேசிய பிரதம தகவல் அதிகாரி வரிசை 2023 இல் Baursதகவல் தொழில்நுட்ப பணிப்பாளர் அனோஜா பஸ்நாயக்க உள்ளடக்கப்பட்டிருந்தார்.

சுவிஸ் நாட்டின் பாரம்பரியம் மற்றும் விழுமியங்களை பின்பற்றி இயங்கும் Baurs, தொடர்ந்தும் மீட்சித்திறனுடனும், தூர நோக்குடைய தலைமைத்துவ அணியை கொண்டு புத்தாக்கங்களை வெளிப்படுத்தி, பல்வேறு வியாபாரங்களில் முன்னிலையில் திகழ்கின்றது. திரண்ட தலைமைத்துவத்தின் வலிமையுடன் வெற்றிகரமான செயற்பாடுகளுக்கு எடுத்துக்காட்டாக இந்த விருது அமைந்துள்ளது.

Sun Siyam பாசிகுடா ஹோட்டலுக்கு

# Travelife Gold சான்றிதழ்

Sun Siyam பாசிகுடா விருந்தினர்களுக்கு பிரத்தியேகமான சொகுசு மற்றும் நிலைபேறாண்மையை வழங்குகின்றமைக்காக பெருமைக்குரிய Travelife Gold சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. சூழலுக்கு நட்பான சுற்றுலா மற்றும் சமூக வலுவூட்டல் போன்றவற்றுக்கான அர்ப்பணிப்புக்காக இந்த உயர் கௌரவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான நிலைபேறான சுற்றுலா விருத்திக்காக சுற்றுலா பகுதிகள், வியாபாரங்கள் மற்றும் பிரயாணிகளுக்கு புத்தாக்கமான தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்காக ஆதரவளிக்கும் இலாப நோக்கற்ற நிகழ்ச்சித்திட்டமாக Travelifeஅமைந்துள்ளது. Travelife Gold சான்றிதழை எய்துவதற்கு ஒரு ரிசோர்ட் 163 நிலைபேறாண்மை விதிமுறைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும். அவற்றில் கழிவு மற்றும் வலுப்பாவனையை குறைத்தல், சமூக பிரச்சனைகளை தீர்த்தல், ஊழியர் நலன்களுக்கு ஆதரவளித்தல் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு மற்றும் உள்நாட்டு சமூகங்கள் மற்றும் வியாபாரங்களுக்கு ஆதரவளித்தல் போன்றன அடங்கியுள்ளன. இந்த முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லுடன், Sun Siyamபாசிகுடா, "தங்குவதற்கு சிறந்த பகுதிகள்" வழங்குவதற்கான தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளதுடன், சூழல் மற்றும் சமூகத்தில் நேர்த்தியான தாக்கத்தையும் வெளிப்படுத்தியுள்ளது.

Sun Siyam பாசிகுடாவின் பொது முகாமையாளர் அர்ஷத் ரிஃபாய் குறிப்பிடுகையில், "சூழலுக்கு நட்பான செயற்பாடுகள், சமூக ஈடுபாடு மற்றும் கலாசார பிரத்தியேகத்தன்மை ஆகியவற்றை ஒன்றிணைத்து, இன்றைய ஆர்வமுள்ள பிரயாணிகளுக்கு ஒப்பற்ற பெறுமதிகளுடனான அனுபவத்தை வழங்குகின்றது. Travelifeதங்க சான்றிதழை எய்தியுள்ளமையானது, எமது மிகவும் பெருமைக்குரிய மைல்கல்லாக அமைந்துள்ளது" என்றார்.





Sun Siyam ரிசோர்ட்ஸ் நிலைபேறாண்மை செயற்திட்ட முகாமையாளர் சமிந்த உபுல் குமார கருத்துத் தெரிவிக்கையில், "நிலைபேறான பிரயாணம், உள்நாட்டு சமூகங்களுக்கு ஆதரவளித்தல் மற்றும் சூழலை பாதுகாத்தல் போன்றவற்றுக்கான எமது அர்ப்பணிப்பை இது மீள உறுதி செய்துள்ளது. பிந்திய சான்றளிப்புடன், இலங்கை மற்றும் மாலைதீவுகளிலுள்ள எமது சகல சொத்துகளும் தற்போது 100 சதவீதம் Travelife சான்றளிப்பை பெற்றதாக அமைந்துள்ளன. எமது குழுமத்துக்கு இது மாபெரும் சாதனையாக அமைந்துள்ளது" என்றார்.

Sun Siyam பாசிகுடாவில் காணப்படும் சில கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முயற்சிகளில், மீள்சுழற்சிக்கு முக்கியத்துவமளித்தல், கொம்போஸ்ட் ஆக்கல் மற்றும் சூழலுக்கு நட்பான தூய்மைப்படுத்தல் தயாரிப்புகளை பயன்படுத்தல் போன்றன அடங்கியுள்ளன. சூரிய வலுவில் ஒளியூட்டல், LED தொழினுட்பம் மற்றும் நீர் பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்றன அடங்கியுள்ளன. விருந்தினர்களும், தாம் தங்கியிருக்கும் காலப்பகுதியில், தமது அறைகளில் காணப்படும் மீள்சுழற்சி தெரிவுகள் மற்றும் தகவல் வழிகாட்டல்களினூடாக இந்தத் திட்டங்களில் பங்கேற்பதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

# இரு விழிகள் காந்தமடி



இழுக்கின்றாய் என்னையடி
இரு விழிகள் காந்தமடி
இதயத்தை ஈர்க்குதடி
ஒரு கணமும் பொறுக்காமல்
உளம்பின்னே ஓடுதடி...
கருமுகிலாம் குழலுக்குள்
கவர்ச்சியென்ன வைத்தாயடி
புரிபுரியாய் அசைகையிலே
பொன்னுலகம் தோன்றுதடி...
அதரங்கள் தேன்குவையோ
அன்புள்ளம் பாற்கடலோ
விதவிதமாய்க் கற்பனைகள்
விளையாடிப் போகுதடி...
காந்தள்நிகர் விரலாலே
காரிகையாள் எனைத்தொட்டால்
ஏந்துமகிழ் வாகுமடி
இவ்வுலகம் இனிக்குமடி.
நிலவோடு பிறந்தவளோ
நீள்வானில் தவழ்ந்தவளோ
மலர்மேனி படைத்தவளோ
மங்கையிவள் தேவதையோ.
என்விழிக்குள் புகுந்தவளே
என்நெஞ்சில் நிறைந்தவளே
இன்னமுதே என்னுயிரே
இழுக்கின்றாய்
என்னையடி.



கந்தவனம்
கோணேஸ்வரன்

# ஏப்பம்



நோய் பல வந்தாலும்
உழைப்புக் குன்றாத
உத்தம புருஷன் அவன்

காலை மாலை பார்ப்பதில்லை
களத்து வேலை செய்து
குடும்பம் காக்கும் காவற்காரன்

வெப்பத்தை உறிஞ்சிக் குடித்து
வெளிறிப் போயிருக்கும் மீசை
விளம்பரத்தில் வருவது போன்ற
பளிச்சிடும் வெண்பற்கள்
நரம்புகள் புடைத்து நிற்கும்
மிடுக்கேறிய உடம்பு

ஓயாத உழைப்பிற்கு
கைகளிலும் கால்களிலுமுள்ள
வெடிப்புகள்தான் சான்று

என்னதான் அவன்
ஓடியோடி
உழைத்தாலும்
வயிறடங்க
உண்பது
மட்டும்
அதிருப்திதான்



கைக்கடங்காத
காசில்
அவன்
கடைக்குட்டிக்கு
காப்பு வாங்குவதா
முதற்குட்டிக்கு
மூக்குத்தி வாங்குவதா

தாள்களைத் திருப்பிப் பார்ப்பதற்குள்
தீர்ந்து போகும் விலைவாசியில்
திருப்திக்கு என்னதான் வாங்க முடியும்?

அவனால் விரல்கள் தாழ
சோற்றுக்குள் சொதி விட்டு
உண்ண முடியாத அவலத்தை
அவன் எந்தத் தென்னையிடம்
முறையிடுவது

பாதத்திற்கு ஏற்ற செருப்பாய்
சேர்ந்து தேயும் மனைவிக்கு
புதுவருடத்திற்கேனும்
புதுத்துணி எடுக்க முடியாத நிலையை
அவன் எந்தக் கடைக்காரனிடம்
சொல்ல முடியும்

எத்தனை தைகள் பிறந்தும்
தலைவிதி மாறவில்லை
எத்தனை அரசு வந்தும்
ஏழை மகிழும் நிலை எங்குமில்லை

முக்கால் பாகத்திற்கு
பவனமே நிரம்பியிருக்கையில்
உண்ட திருப்தியின்
ஏப்பம்
எப்போது வருமோ...?
அவனுக்கு.

தமிழ்க்கீரன்,
கல்மடு, கல்குடா



# வரம்



ஆயிரம் ஆயிரம்
வேண்டுகோள்
(தல்)களையும்
அவள் ஒருத்தியால்
எப்படி நிறைவேற்றிட
முடியும் என்று
பெருமூச்சிரைத்துக்
கிடக்கிறது
யாதுமானவளின்
பெருங்கதவு
இத்தனை காலமும்
முடிந்தது தானே
இனியும்
சாத்தியம் தானே
சுடர் விடும்
தீயில்
நம்பிக்கையின்
சுவாலைகள்
தீந்து விடாது
இருக்கட்டுமே
தீச்சட்டி
மன(ண)ங்கள்

திருமலை சிட்டு

# புத்தாண்டில் புது விடியல்...



2025 என மலர்ந்த
புத்தாண்டே நீ வருக..!
ஆங்கிலப் புத்தாண்டு
என
அழைத்தாலும்
இதுவோர்
அகிலத்தின் புத்தாண்டு
அதிலோர்
தயக்கமில்லை..!

ராஜ வம்சங்கள்
இரசமிழந்த கோலத்தை
ஆசை தீரப் பார்த்த
ஆண்டாக
இருபத்திநாலு
வந்து போனது
வரலாறாக..!

எழுபத்தைந்து
ஆண்டுகளாக
எத்தனை
அட்டகாசங்கள்
வைத்ததே சட்டம்,
பிற இனத்தில்
வசைபாடி தீர்த்து
சட்டம் நீதி சமச்சீர்
நெறிகளை
திட்டம்போட்டழித்து
சிம்மாசனத்தை
அலங்கரித்து
நானே ராஜா நானே
மந்திரி
என்ற ஆணவத்தை
செங்கோலாக்கி
நாட்டை சீரழித்து
வளங்களைச் சுரண்டி
தமது வாழ்வையும்
வம்சத்தையும்
வளப்படுத்தி
உண்டு கொழுத்த
வெள்ளை யானைகளின்
முகமூடியைக் கிழித்த
ஆண்டாக சென்ற
ஆண்டு
வந்து
போனது
வரமாக மக்களுக்கு..!

வசந்த காலமென எமக்கு
மலர்ந்துவந்த
புத்தாண்டே..!
கசந்த வாழ்வியலால்
கட்டுண்டு
இசைந்து வாழ்ந்த
இனங்களெல்லாம்
இரண்டுபட்டு
மோதித் துயரத்தில்
மூழ்கிக்கிடந்த
காலங்களைக் கண்ணீரை
விடைகொடுத்து
மீண்டெழுந்து
காணும் புது வசந்தம்,
உன்
காலத்தில் மலரட்டும்..!

வேற்றுமைக்கு
விடைசொல்வோம்
ஒற்றுமைக்கு
கையசைத்து
இலங்கையர்
நாமெனவே
இணைந்தே
பயணிப்போம்.
புலரட்டும்
ஒரு விடியல்
புத்தாண்டில் நல்ல
புதுவாழ்வு மலரட்டும்
தேசமெங்கும்..!

ஷெல்லிதாசன்

புதுடெல்லி

‘ஜெய் பாபு, ஜெய் பீம்’ பிரசார பேரணி

# இன்று ஆரம்பம்

மன்மோகன் சிங் மறைவால் ஒத்திவைக்கப்பட்ட ‘ஜெய் பாபு, ஜெய் பீம்’ பிரசார பேரணியானது இன்று வெள்ளிக்கிழமை (3) ஆரம்பிக்கப்படும் என காங்கிரஸ் அறிவித்துள்ளது.

சுதந்திரத்துக்காகப் பாடுபட்ட காந்தியின் புகழ் மற்றும் அரசியல் சட்டத்தை உருவாக்கிய அம்பேத்கரை நினைவு கூறும் வகையிலும், நாடு முழுவதும் மத்திய, மாவட்ட, மாநில அளவில் ‘ஜெய்பாபு, ஜெய் பீம், ஜெய் அரசியல் சாசனம்’ என்ற கோஷத்துடன் பேரணிகள், கூட்டங்கள்



நடத்தப்படும் என்று, கடந்த மாதம் 26ஆம் திகதி, பெலகாவியில் நடந்த காங்கிரஸ் செயற்குழு கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

அதே நகரில், ‘ஜெய் பாபு, ஜெய் பீம், ஜெய் அரசியல் சாசனம்’ என்ற பிரசார பேரணி ஆரம்பிக்கப்படுவதாக இருந்தது. ஆனால், கடந்த 26ஆம் திகதி இரவு, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் காலமானார்.

அவரது மறைவுக்கு 7 நாட்கள் துக்கம் அறிவிக்கப்பட்டது. அதனால், 27ஆம் திகதி நடத்தத் திட்டமிட்டிருந்த பேரணி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, 7 நாட்கள் துக்கம் முடிவடையும் நிலையில், இன்று (03) ‘ஜெய் பாபு, ஜெய் பீம், ஜெய் அரசியல் சாசனம்’ பிரசார பேரணி ஆரம்பமாகவுள்ளது.

உத்தரப்பிரதேசம்

மூடியிருந்த கோவில்

# 44 ஆண்டுகளின் பின்னர் திறப்பு

உத்தரப்பிரதேச மாநிலத்தில் மூடப்பட்டுக் கிடக்கும் கோவில்களை வழிபாட்டிற்குத் திறக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் முதற்கட்டமாக, மொரதாபாத் மாவட்டத்தின் தவுலதாபாக் பகுதியில் உள்ள கோவில் ஒன்று, 44 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் புதன்கிழமை (1) அன்று திறக்கப்பட்டுள்ளது.

2 சமூகத்தினரிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக மூடப்பட்டுக் கிடந்த இந்தக் கோவில், அரசு நிர்வாக முயற்சியின் மூலம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் மற்றும் நிர்வாக அதிகாரிகள் முன்னிலையில், இந்த கோவிலின் திறப்பு விழா நடைபெற்றது.

மக்கள் ஏகோபித்த ஆதரவு அளித்ததால், எந்தவித எதிர்ப்பு மற்றும் அசம்பாவிதமின்றி கோவில் திறக்கப்பட்டுள்ளது. அப்போதுதான் சில சிலைகள் சாய்ந்தும், மாயமாகியும் இருப்பது தெரியவந்துள்ளது.



இதையடுத்து, கோவில் நிர்வாகிகள் சீரமைப்பு பணிகளை மேற்கொண்டு, அவற்றைச் சரி செய்யும் பணியில் இறங்கியுள்ளனர். விரைவில் வழக்கமான வழிபாடுகள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுவிட்ஸர்லாந்து

சுவிட்ஸர்லாந்தில்

# புர்கா அணிய தடை



சுவிட்ஸர்லாந்தில், இஸ்லாமிய பெண்களின் முகம் மற்றும் உடல்களை மறைப்பதற்காக அணியும் புர்காவுக்கு, அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது.

இது தொடர்பாக அந்நாட்டின் ஆளும் பெடரல் கவுன்சில் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“புர்காவுக்கு தடை என்ற உத்தரவு தொடர்பான தீர்மானம் 2021இல் நிறைவேற்றப்பட்டது. இது வரும் ஜனவரி 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வருகிறது என அறிவித்திருந்தது. “விமானங்கள், தூதரக வளாகங்கள் ஆகிய இடங்களில் இந்த தடை உத்தரவு அமல்படுத்தப்படாது. வழிபாட்டுத் தலங்கள், பிற புனிதத் தலங்களிலும், மசூதிகளுக்கும் இந்த உத்தரவு பொருந்தாது.

“உடல்நிலை மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காக முகத்தை மறைத்துக் கொள்ளலாம். மத ரீதியாக அல்லது தட்பவெப்ப நிலை காரணமாக அவ்வாறு செய்யக்கூடாது.

“இந்த தடையை மீறுபவர்கள் உடனடியாக 10 ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்த மறுத்தால் அதிகபட்சமாக 1 இலட்சம் ரூபாய் வரை செலுத்த நேரிடும்” என குறிப்பிடப்பட்டுள்ளது..

இந்நிலையில், சுவிட்ஸர்லாந்தில் பெண்கள் முகத்தை மறைக்கும் வகையிலான புர்கா அணிவதற்குத் தடை என்ற உத்தரவு, புதன்கிழமை (01) முதல் அமுலுக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது.

சிம்பாப்வே

சிம்பாப்வேயில்

# மரண தண்டனை இரத்தானது

சிம்பாப்வேயில் பல ஆண்டுகளாகவே மரண தண்டனைக்கு எதிராகத் தீவிர பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வந்தது. குறிப்பாக கடந்த 2017ஆம் ஆண்டு அந்த நாட்டின் ஜனாதிபதி பொறுப்பேற்ற எம்மர்சன் மனங்காக்வா மரண தண்டனைக்கு எதிரான எதிர்ப்பை பற்றி பகிரங்கமாகப் பேசியுள்ளார்.

1960களில் சுதந்திரப் போரின் போது மரண தண்டனையை எதிர்கொண்டவரான எம்மர்சன் மனங்காக்வா, மரண தண்டனை முற்றிலுமான ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்துள்ளார்.

மேலும், பொது மன்னிப்பு வழங்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பயன்படுத்தி மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்து வந்துள்ளார்.

இந்த நிலையில், நாட்டில் மரண தண்டனையை இரத்து செய்வதற்கான சட்ட மசோதா கடந்த வாரம் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் மசோதா ஒரு மனதாக நிறைவேறியது.

இதையடுத்து, மரண தண்டனை இரத்து செய்யும் சட்ட சோதாவுக்கு ஜனாதிபதி எம்மர்சன் மனங்காக்வா ஒப்புதல் அளித்துள்ளார்.

இதன் மூலம் சிம்பாப்வேயில் மரண தண்டனை இரத்து செய்யப்பட்டுள்ளது. சிம்பாப்வேயில், தற்போது 60 கைதிகள் மரண தண்டனையில் உள்ளனர்.

இந்த புதிய சட்டத்தை அமுல்படுத்தப்பட்டதை தொடர்ந்து அவர்களின் தண்டனை இரத்து செய்யப்பட்டுள்ளது. சிம்பாப்வேயில் கடைசியாகக் கடந்த 2005ஆம் ஆண்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சிம்பாப்வே


புத்தாண்டு கொண்டாட்ட கூட்டத்தில் விபத்து

# 10 பேர் பலி; 30 பேர் காயம்

அமெரிக்காவின் லூசியானா மாகாணத்தில் உள்ள நியூ ஓர்லேன்ஸ் (New Orleans) நகரில், புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது ஏற்பட்ட விபத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

நியூ ஓர்லேன்ஸ் நகரில் இடம்பெற்ற புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது, திடீரென அதிவேகத்தில் வந்த கார் ஒன்ற அங்கிருந்தவர்கள் மீது பலமாக மோதியுள்ளது. இந்த விபத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்ததுடன், 30க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இதனிடையே வேகமாகக் கூட்டத்தில் மோதிய காரின் சாரதி, திடீரென தனது துப்பாக்கியால் அங்கிருந்தவர்களை நோக்கிச் சுடத்தொடங்கியதாக அந்நாட்டு ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.



மூன்றாவது போட்டியில்

# நியூசிலாந்தை வென்ற இலங்கை

நியூசிலாந்துக்கெதிரான மூன்றாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியில் இலங்கை வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளில் வென்ற நியூசிலாந்து தொடரை ஏற்கெனவே கைப்பற்றியுள்ள நிலையில், நெல்சனில் நேற்று நடைபெற்ற மூன்றாவது போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவ்வணியின் தலைவர் மிற்செல் சான்ட்னெர் தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடுமென தெரிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, குசல் பெரேராவின் 101 (46), அணித்தலைவர் சரித் அசலங்கவின் 46 (24) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 218 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், டரைல் மிற்செல் 1-0-6-1, ஜேக்கப் டஃபி 4-0-30-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு 219 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, றஷின் றவீந்திரவின் 68 (39), டிம் றொபின்சனின் 37 (21) ஓட்டங்கள் மூலம் வேகமான ஆரம்பத்தைப் பெற்றதுடன், டரைல் மிற்செல் 35 (17) ஓட்டங்களைப் பெற்றபோதும், 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 211 ஓட்டங்களையே பெற்று ஏழு ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக குசல் பெரேராவும், தொடரின் நாயகனாக ஜேக்கப் டஃபியின் தெரிவாகினர்.



# பார்சிலோனா செல்லும் லூயிஸ் டியஸ்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான லிவர்பூலின் முன்களவீரரான லூயிஸ் டியஸை ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா கைச்சாத்திட விரும்புவதாகக் கூறப்படுகிறது.

லிவர்பூலுடன் எதிர்வரும் 2027ஆம் ஆண்டு வரையில் 27 வயதான டியஸ் ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கின்றபோதும் மேம்படுத்தப்பட்ட ஒப்பந்தமொன்று தொடர்பாக பேச்சுகள் ஆரம்பிக்காதது தொடர்பில் அவர் அதிருப்தியடைந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.



இன்று ஆரம்பமாகும்

# 2ஆவது டெஸ்ட் தொடரை சமப்படுத்துமா பாகிஸ்தான்?



தென்னாபிரிக்க, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது கேப் டௌணில் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை தென்னாபிரிக்கா வென்றுள்ள நிலையில் தொடரைச் சமப்படுத்துவதற்கு இப்போட்டியை கட்டாயம் வென்றாக வேண்டிய நிலையில் பாகிஸ்தான் உள்ளது. இப்போட்டிக்கான ஆடுகளமானது சுழற்பந்துவீச்சுக்கு ஒத்துழைக்கும் என எதிர்பார்க்கப்பட்டாலும் நொமன் அலி அணி இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே காணப்படுகிறது. சல்மான் அலி அக்ஹாவுடன் கம்ரான் குலாம் சுழற்பந்துவீச்சை கவனித்துக் கொள்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, முதலாவது டெஸ்டில் விளையாடிய ஆமிர் ஜமாலை மிர் ஹம்ஸா பிரதியிடக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

மறுபக்கமாக தென்னாபிரிக்க அணியில் கொர்பின் பொஷ்னை வியான் முல்டர் பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் கேஷவ் மஹாராஜ் அல்லது அவர் முழு உடற்றகுதியை பெறாமல் விடுமிடத்து செனுரன் முத்துசாமியும் அணியில் இடம்பெறக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

# ஆர்சனல் செல்லும் றஷ்ஃபோர்ட்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்களவீரரான மார்க்கஸ் றஷ்ஃபோர்ட்டைக் கைச்சாத்திடுவது குறித்து இன்னொரு பிறீமியர் லீக் கழகமான ஆர்சனல் கருத்திற் கொள்வதாகவும், ஆனால் 25 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்களுக்கு மேல் செலுத்தத் தயாரில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

யுனைட்டெட்டுடன் எதிர்வரும் 2028ஆம் ஆண்டு வரையில் 27 வயதான றஷ்ஃபோர்ட் ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கிறாரென்பது குறிப்பிடத்தக்கது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 03 ஜனவரி 2025, இல.08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு,இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.